[ஜே. முகம்மது கனி]

இல்லாமல் புதுக்கோட்டை பூம்புகார் விற்பனை நிலையத்தை தொடர்ந்து நடத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையத்தை பொறுத்த வரையில் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிகாரி பற்றிய குறிப்பு இல்லை. பீஸ் ரேட் மூலமாக கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு சம்பளம் என்று சொன்னால் நஷ்டமாக இருந்தாலும்கூட மாதம் இவ்வளவு சம்பளம் என்று கொடுத்து விடலாம்.

(முற்பகல் 11—20)

ஒரு வேலையைச் செய்து முடித்தால் அந்த வேலையைச் செய்து முடித்த பிறகு 10 காசு, 15 காசு என்ற வகையில் வேலை செய்வதற்கான மூலப் பொருளுக்குச் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன. அந்தச் சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(58) தஞ்சை ராஜா அரசினர் மருத்துவமனையில் ஆபரேஷன் செய்ததில் ஏற்பட்ட கோளாறு.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை ராஜா அரசினர் மருத்துவமனையில் காலில் ஆப்பரேஷன் செய்வதற்குப் பதிலாக வேறு இடத்தில் ஆப்பரேஷன் செய்து அதனால் ஏற்பட்ட நிலைமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)

(59) புதுக்கோட்டை காவேரி நூற்பாலைத் தொழிலாளர்கள் போராட்டம்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை காவேரி நூற்பாலை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று அங்கே உள்ள தொழிலாளர்கள் 9—5—1986 முதல் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சுமார் 180 பேர் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(பதில் இல்லை.)